வீரகேசரி ஞாயிறு பத்திரிகை கடந்த 11ம் திகதி தனது முன்பக்கத்தில் அண்மையில் சீனாவிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்த குழுவினர் பிரதமர் மஹிந்த ராஜபக்சவை சந்தித்தபோது எடுத்ததாக கூறப்படும் புகைப்படத்தை பிரசுரித்தது. ஆனால், பிரதமரின் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட புகைப்படம் வீரகேசரி பிரசுரித்த புகைப்படத்திலிருந்து வேறுபடுகின்றது. அதாவது, பிரதமரின் டுவிட்டர் பக்கத்தில் பிரசுரித்த புகைப்படத்தில் பிரதமர் சீனக்குழுவின் தலைவருக்கு வழங்கிய ஞாபகார்த்தப் பரிசில் (புகைப்படத்தில்) அவர்கள் இருவரும் உரையாடும் காட்சி உள்ளது. ஆனால், வீரகேசரி பிரசுரித்த புகைப்படத்தில், அவ் ஞாபகார்த்தப் பரிசில் இலங்கையை சீனாவுக்கு பரிசாக வழங்குவது போன்ற காட்சி காணப்படுகின்றது. இவ்வாறு உண்மையான புகைப்படத்தை மாற்றியமைத்து பிரசுரிப்பது ஊடக நெறிமுறைகளை மீறும் செயலாகும்.

**#MediaEthicsSL #lka #TamilPress #Virakesari**